பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 14 சனிக்கிழமை 26.02.2022 கதிர் 339

## வாக்கெடுப்பில் பங்கேற்காமல் ரஷ்யாவுக்கு இந்தியா ஆதரவு

ரஷ்யாவுக்கு எதிராக ஐ.நாவின் பிரேரணை மீதான இன்றைய வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்கவில்லை.

11 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தபோதும் ரஷ்யா தனக்குள்ள வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரேரணையை முறியடித்தது. இதனால், உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்கும்

☞2

# உக்ரைன் மீது கொடூரத் தாக்குதல் நடத்தும்

# ரஷ்யாவுக்கு எதிரான ஐ.நா. பிரேரணை தோல்வி வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி முறியடிப்பு

உக்ரைன் மீதான தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்து ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரஷ்யா முறியடித்தது.

உக்ரைன் மீது ரஷ்யப் படைகள் உக்கிரமான தாக்குதலை மூன்றாவது நாளாக நடத்தி வருகின்றது. வான்வழி, கடல்வழி மற்றும் தரைவழி என மும்முனைத் தாக்குதலை நடத்துவதால் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. உக்ரைன் நாட்டின் ஏராளமான இராணுவ இலக்குகளை ரஷ்யப் படைகள் தாக்கி அழித்துள்ளன.

அதேபோல் உக்ரைன் தங்களைத் தற்காத்துக் கொள்ள, ரஷ்யப் படைகளுக்குப் பதிலடி கொடுத்து வருகின்றது. இதனால் தொடர்ந்து பதற்றமான சூழல் உள்ளது. உக்ரைன் தலைநகர் கீவ் நகரையும் நெருங்கியுள்ள ரஷ்யப் படைகள் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன

இந்நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்க ஐ.நா. சபையில் இன்று பிரேரணை கொண்டுவரப்பட்டது. அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில், 11 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன. இந்தியா, சீனா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 3 நாடுகள்

☞2



## மாவிட்டபுரத்தில் ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., மாவிட்டபுரத்திலுள்ள பாதுகாப்பான ரயில் கடவையில் ரயிலுடன் மோதி நபர் ஒருவர் இன்று சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்

குறித்த நபர் ரயில் வருவதற்காக கடவை மூடப்பட்டிருந்த நிலையில் அறியாமையால் மோட்டார் சைக்கிளில் பயணிக்க முற்பட்ட வேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சாந்தை -

☞2

## பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரை

# போராட்டம் தொடரும்!

### சுமந்திரன் எம்.பி. திட்டவட்டம்



நாட்டில் இன, மத பேதமின்றி சகல மக்களுக்கு எதிராகவும் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படும் நிலைமையே உருவாகியுள்ளது. ஆகவே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி நாம் முன்னெடுத்துள்ள போராட்டமும் இறுதி வரையில் கொண்டுசெல்லப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரையில் எமது போராட்டத்தைக் கொண்டு செல்வோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

☞2

## திங்கட்கிழமை முதல் மீண்டும் மின் தடை

நாட்டில் தற்போதைய சூழ்நிலையின் அடிப்படையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மீண்டும் மின்சாரத் துண்டிப்பை அமுல்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனப் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இன்றும், நாளையும் இரவு வேளைகளில் மின்சாரத் துண்டிப்பு அமுலாக்கப்படமாட்டாது என அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பகல்வேளையில் ஏ, பி மற்றும் சி வலயங்களில் 3 மணித்தியாலயங்களும், ஏனைய வலயங்களில் 2 மணித்தியாலமும் 30 நிமிடங்களும் மின் துண்டிப்பு

☞2

## சிவனொளிபாதமலை சென்ற 193 பேர் கைது



சிவனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பமாகி சுமார் இரண்டு மாத காலத்துக்குள் போதைப்பொருள்களுடன் சிவனொளிபாத மலைக்குச் சென்ற சுமார் 193 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிவனொளிபாதமலைக்குப் போதைப்பொருள்கள் கொண்டு செல்வதைத் தடுப்பதற்காக ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன், கொழும்பு, பலாங்கொடை, பொகவந்தலாவை, நோர்வூட், மஸ்கெலியா, தியகல, நோர்ட்டன் உள்ளிட்ட பிரதான வீதிகளில் பல இடங்களில் பரிசோதனை நடவடிக்கைகள்

☞2

## மன்னார் நகரில் இன்று கையெழுத்து வேட்டை



(மன்னார் நிருபர்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி மன்னாரில் இன்று கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பஸ் நிலையத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இந்தக் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இன்றைய கையெழுத்துப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், சார்ள்ஸ் நிர்மலநாதன், மதத்தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

☞2

☞2



## போராட்டம் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ச்சியாக முன்வைத்து நாடு பூராக வும் அதற்கான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

ஆரம்பத்தில் இருந்தே தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட இந்தச் சட்டமானது இன்று நாட்டில் சகல மக்களுக்கும் எதிராகப் பயன்படுத்தப்படும் நிலைமையே உருவாகியுள்ளது. ஆகவே, இன, மத, பேதம் இன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையைச் சகலரும் முன்வைத்து வருகின்றனர்.

ஏற்கனவே முன்னைய ஆட்சியில் இந்தச் சட்டத்தை நீக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு அதற்குப் பொது இணக்கம் காணப்பட்ட போதும் 2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற அரசியல் குழப்பங்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்களுக்குப் பின்னர் நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

எனினும், இன்று நிலைமைகள் சுமுகமாக உள்ள காரணத்தால் இதனை நாம் வலியுறுத்த வேண்டியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சர்வதேச நாடுகளும், அமைப்புகளும் தொடர்ச்சியாக வலியுறுத்திக்கொண்டுள்ளன.

இம்முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலும் இந்த விடயங்கள் வலியுறுத்தப்படும். இப்போது நாம் முன்னெடுத்துள்ள போராட்டமும் இறுதிவரையில் கொண்டுசெல்லப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரையில் எமது போராட்டத்தைக் கொண்டு செல்வோம் - என்றார்.

## திங்கட்கிழமை முதல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமுலாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 38 ஆயிரத்து 400 மெற்றிக் தொன் பெற்றோல் அடங்கிய கப்பல் ஒன்று இன்று நாட்டை வந்தடையவுள்ளது என வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம் மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான உலை எண்ணெய்த் தாங்கிக் கப்பலை அடுத்த வாரம் நாட்டுக்கு வரவழைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## சிவனொளிபாதமலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து கேரளா கஞ்சா, போதை மாத்திரைகள், தடைசெய்யப்பட்ட சிகரெட்டுக்கள், மதன மோதக்கய, ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சோதனை நடவடிக்கைகளின் போது ஸ்டுட் என்ற பொலிஸ் மோப்ப நாய் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நாயின் உதவியுடன் போதைப் பொருள்கள் வைத்திருந்த சுமார் 87 நபர்களைக் ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று சிவனொளிபாதமலை யாத்திரை செய்வதற்காகக் கேரளக் கஞ்சாவுடன் சென்ற மேலும் 13 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனவும், இவர்களைக் ஹற்றன் நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மன்னார் நகரில் இன்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நவரசம் எனும் கவிதை நூல் வெளியிட்டமையின் காரணமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 19 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட கவிஞரும் ஆசிரியருமான அஹ்னாப் ஜஸீமும், அவரது குடும்பத்தினரும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரும் ஆவணத்தில் கைச்சாத்திட்டிருந்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கான கையெழுத்துப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இது வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு கிழக்கு மற்றும் தெற்கிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## ரஷ்யாவுக்கு எதிரான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

11 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தபோதும் ரஷ்யா தனக்குள்ள வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரேரணை முறியடித்தது. இதனால், உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் ஐ.நா. சபையின் பிரேரணை தோல்வியில் முடிந்தது.

## வாக்கெடுப்பில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. சபையின் தீர்மானம் தோல்வியில் முடிந்தது.

இந்த விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிரான பிரேரணை மீதான வாக்கெடுப்பில் பங்கேற்காமல் இந்தியா புறக்கணித்துள்ளது. இந்தியா மட்டுமின்றி சீனா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளும் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

உக்ரைன் விவகாரத்தில் ஐ.நா. சபையில் தங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என இந்தியாவிடம் ரஷ்யாவும், அமெரிக்காவும் கோரிக்கை விடுத்திருந்தது. தற்போது வாக்கெடுப்பில் ரஷ்யாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் இந்தியா வாக்கெடுப்பில் பங்கேற்காமல் தவிர்த்துவிட்டது. இது இந்தியா - ரஷ்யா உறவில் நெருக்கத்தையும், இந்தியா - அமெரிக்கா உறவில் விரிசலையும் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மாவிட்டபுரத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்டத்தரிப்புப் பகுதியைச் சேர்ந்த சதாசிவம் சசிக்குமார் (வயது - 46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

## மாவிட்டபுரத்தில் ரயிலுடன் மோதிய விபத்து



வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்
புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்
2022 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான
கடினமான வினாக்களை உள்ளடக்கி வெளிவரும்
முதற்தர மாதிரி வினாப்பத்திரம்
வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகளும், வினாத்தாள்களை தெளிவுபடுத்தும் வினாவிடை வகுப்புகளும் ஆரம்பமாகிவிட்டன.
பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை
பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)
பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15
விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்
தரம் 4, தரம் 5 இரண்டாவது பரீட்சை 27.02.2022
தரம் 3 இரண்டாவது பரீட்சை 06.03.2022
அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க வெற்றித்தேர்வு பரீட்சை எழுதும் மாணவர்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வினாத்தாள்களை வெற்றித்தேர்வு வளவாளர்களால் தெளிவுபடுத்தப்படும்
விசேட வினாவிடை வகுப்புகள்
வினாவிடை வகுப்பு – சனிக்கிழமை
தரம் - 3 காலை 10.00 - 12.00, தரம் - 4 மதியம் 12.30 - 2.30, தரம் - 5 மாலை 3.00 - 5.30
பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# கொழும்பின் பேச்சு எடுபடாது

'கெடுவான் கேடு நினைப்பான்.'

'கெடுகுடி சொல் கேளாது' – என்பர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செலி பச்சலெட் அம்மையாரின் இலங்கை தொடர்பான அறிக்கையை ஒட்டி, இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்திருக்கும் பதிலடியின் மூர்க்கம் இதனைத்தான் நினைவூட்டுகின்றது.

இலங்கையின் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இடம் பெற்றவை எனக் கூறப்படும் விடயங்கள் தொடர்பான சாட்சியங்கள் ஆவணங்களைச் சேகரிப்பதற்கான அலுவலகம் ஒன்றை இலங்கையை ஒட்டித் திறப்பதற்கு தனது அலுவலகம் முடிவு செய்திருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தமது இலங்கை தொடர்பான அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

அந்த அறிக்கையின் மீது ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் வரும் 3ஆம் திகதி – அதாவது வரும் வியாழக்கிழமை – விவாதம் நடைபெற இருக்கின்றது. மேற்படி ஆவணங்கள், சாட்சியங்கள் சேகரிப்புக்கான மையம் ஒன்றைத் திறக்க தமது அலுவலகம் தீர்மானித்துள்ளது என்ற பச்சலெட் அம்மையாரின் அறிக்கையை மூர்க்கமாக எதிர்த்திருக்கின்றார் இலங்கையின் வெளிவிவகார செயலாளர்.

"அப்படி ஓர் அலுவலகம் இலங்கையில் செயற்பட நாம் அனுமதிக்க மாட்டோம். வெளியாரால் நடத்தப்படும் இத்தகைய பொறிமுறை இலங்கையில் செயற்பட இடமளிக்க முடியாது" – எனக் காட்டமாகக் கூறியிருக்கின்றார் அவர்.

முன்னாள் கடற்படைத் தளபதி அவர். இலங்கைப் படைத்தரப்பின் முன்னாள் மூத்த அதிகாரி. அவர் அப்படித்தான் பேசுவார். அதுதான் அந்த மட்டத்திலுள்ள முன்னாள் படை அதிகாரிகளின் பொதுவான பண்பியல்பு. அதுவும் விடுதலைப் புலிகளையே தோற்கடித்தோம் என்ற மமதையில் இருக்கும் இலங்கை படையின் திமிர் பேச்சும் அப்படித்தான் எப்போதும் இருக்கும்.

ஆனால் புலிகளை எப்படி தோற்கடித்தார்கள் என்பதைக் கிளறிப் பார்க்க முயலும் எந்த முயற்சியையும் இவ்வாறு தான் அவர்கள் முழு மூச்சுடன் எதிர்ப்பர். அது இயல்பு.

ஏனெனில் இவ்விடயத்தில் ஏற்கனவே உலகுக்கு தெரிந்த உண்மை, இத்தகைய சுயாதீன விசாரணை நடவடிக்கை தொடர்பான ஆவண சாட்சியங்கள் மூலம் சான்றாதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட்டு விடும் – நிரூபணமாகி விடும் என்பதால் இத்தகைய சீற்றம். அது புரிந்து கொள்ளத்தக்கதே.

ஆனால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் போன்ற சர்வதேச உயர் பதவியில் இருக்கும் ராஜதந்திரிக்கி இப்படிக் கண்மூடித்தனமாக – மூர்க்கமாக – பதிலடி கொடுத்து, மமதைப் பாணியில் பதில் தந்தால், அது இலங்கை தொடர்பான மேற்படி சர்வதேச இராஜதந்திர நகர்வு முயற்சியை முடக்கிவிடும் என்று முன்னாள் கடற்படைத் தளபதி நம்புவார் என்றால், அது அவருக்குப் பகல் கனவாகவே முடியும்.

இவ்விடயத்தை ஒட்டி உள்ளூர் பொறிமுறை ஒன்று ஒரு வடிவம் எடுத்து வருகையில், இப்படி சர்வதேசத் தரப்பு ஒன்று இங்கு வந்து அந்த வேலையை முன்னெடுக்க அனுமதிக்க முடியாது என்று கூறியிருக்கின்றார் வெளிவிவகாரச் செயலாளரான முன்னாள் கடற்படைத் தளபதி.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை குறித்து விசாரிப்பதற்கான இலங்கையின் உள்ளூர் பொறிமுறைக்கு சர்வதேசமும், ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலும் காத்திருந்து, நம்பிக்கை இழந்து, வருடங்களாகிவிட்டன. அதனை ஆணையாளரின் பல அறிக்கைகள் வெளிப்படையாக உறுதி செய்துள்ளன.

இந்த நிலையில், யுத்தம் முடிந்து 13 ஆண்டுகள் கழிந்த பின்னர், இது தொடர்பான ஆவணங்கள், சாட்சியங்களைத் திரட்டும் பொறிமுறை இப்போது தான் நாட்டில் உருவெடுத்து வருகின்றது என்ற முன்னாள் கடற்படை தளபதியின் பிதற்றலை இனியும் சர்வதேசம் நம்பும் – ஏற்கும் – நியாயமான பேச்சு என்று கருதும் – என எண்ணுவது அர்த்தமற்றது.



# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகளுக்கு எதிராக போராட்டம்!

## நடத்த வலி.தெற்கு பிரதேசசபை முடிவு

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகள் எல்லை மீறி செல்வதை தடுக்கவும் மக்களின் நலன்கள் அனைத்தும் மக்களின் விருப்புக்கமைவான தெரிவுகளாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் வலி.தெற்கு பிரதேச செயலகம் முன்றிலில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

வலி.தெற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் க.தர்சன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பிரதேசத்தின் அபிவிருத்திகள் தொடர்பில் ஆராயப்பட்ட நிலையில் பல அபிவிருத்திகளை முன்னெடுப்பதில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இடையூறாக உள்ளதாகவும் அவர்களின் தன்னிச்சையான முடிவுகளால் மக்கள் பல அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனவும் அதிகளவான உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக வட்டாரத்துக்கு 40 லட்சம் முன்மொழிவுகளை அரசியல் நுழைவு இன்றின் வட்டாரத்தின் பிரதிநிதிகள் ஊடாகத் தெரிவுசெய்யப்பட வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் அது யாழ்ப்பாணத்தில் மட்டும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் முடிவாக இருக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியிருந்தனர்.

நாடு முழுவதும் ஒரே நடைமுறை என்றால் அதை ஏற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்த உறுப்பினர்கள், ஆனால் இவ்வாறான மக்களின் முன்மொழிவு நடைமுறை யாழ்ப்பாணத்தில் மட்டும் காணப்படவில்லை என்று சுட்டிக்காட்டியிருந்தமையுடன் இவ்வாறான நிலையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் வலியுறுத்திய உறுப்பினர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரதும் அவர் சார் தரப்பினரதும் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப மக்களின் தேவைகளை நிர்ணயிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வலியுறுத்தியிருந்தனர்.

அத்துடன் இது தொடர்பில் நிதி அமைச்சருக்கும் ஜனாதிபதிக்கும் அறிவிக்கவுள்ளதுடன் அதை எதிர்த்து பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தனர்.

# மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட நாடுகளே இலங்கையை சாடுகின்றன!

## வெளிவிவகார அமைச்சு குற்றச்சாட்டு



இலங்கை மீது குற்றம் சுமத்தும் பல நாடுகள், கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளன என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், ஏப்ரல் மாதம் முதலாம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரின் இலங்கை தொடர்பான அறிக்கை தொடர்பாக எதிர்வரும் 3 ஆம் திகதி விவாதிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், ஜெனிவா கூட்டத்தொடர் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அவர், எதனையும் செயற்படுத்த வேண்டும் என எந்தவொரு அரசாங்கமும் இந்த அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கத் தேவையில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தால் ஆற்றப்படும் நல்ல விடயங்களை ஏற்று அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதையே அவர்கள் செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தம் காரணமாக, மாதமொன்றுக்கு அனைத்து இனங்களையும் சேர்ந்த சுமார் 250 உயிர்கள் காவுகொல்லப்பட்டன எனவும் ஆனால், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதியின் பின்னர் ஈஸ்டர் தாக்குதலைத் தவிர்த்து உயிரிழப்புகள் இடம்பெற்ற சந்தர்ப்பம் பூச்சியமாகுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பாகப் பேசுவதற்கு முன்னர், மனிதன் ஒருவன் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவது முக்கியமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மீது குற்றம் சுமத்தும் நாடுகளின் கடந்த இரண்டு தசாப்தகால செயற்பாடுகளைப் பார்த்தால், அவை மனித உரிமைகளை மீறி, வேறு நாடுகளை ஆக்கிரமித்து அந்த நாடுகளில் பெருமளவான உயிரிழப்புகளை ஏற்படுத்திய பல சந்தர்ப்பங்களைக் குறிப்பிட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் 'மானுடம் 2022' என்னும் பெயரிலான சர்வதேச ஆய்வு மாநாடொன்றை எதிர்வரும் ஜூலை மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

'மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்' என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஒருபகுதியாகக் கலைப்பீடம் இந்த மாநாட்டை ஒழுங்கமைத்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





# 2,800 ரஷ்யப் படைகள் சாவு! பதிலடி கொடுக்கும் உக்ரைன்

இதுவரை நடந்த சண்டையில் 2,800 ரஷ்ய படையினர் கொல்லப்பட்டனர் என உக்ரைனின் துணை பாதுகாப்பு அமைச்சர் ஹன்னா மல்யார் கூறியுள்ளார்.

உக்ரேனியப் படைகள் சுமார் 80 ரஷ்ய தாங்கிகள், 516 கவச போர் வாகனங்கள், 10 விமானங்கள் மற்றும் 7 உலங்கு வானூர்திகளை அழித்துள்ளன என்று பேஸ்புக்கில் தெரிவித்துள்ளார்.

சுயாதீனமாக இதை உறுதி செய்ய முடியவில்லை. ரஷ்யாவும் இதற்கு பதில் வழங்கவில்லை.

# இந்தோனேஷியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்; இரண்டு பேர் உயிரிழப்பு



இந்தோனேஷியாவை தாக்கிய சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில், குறைந்தது இரண்டு பேர் உயிரிழந்துள்ளதோடு 20 பேர் காயமடைந்துள்ளனர் என, தேசிய பேரிடர் மேலாண்மை முகமை தெரிவித்துள்ளது. இந்தோனேஷியாவில் 6.2 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால், அங்குள்ள பாடசாலைகள், வங்கி உள்ளிட்ட சில கட்டடங்களும் சேதமடைந்துள்ளன. மிகவும் பாதிக்கப்பட்ட இரண்டு பிராந்தியங்களான பசமன் மற்றும் மேற்கு பாசமான் ரீஜென்சிகளுக்கு மீட்புக்குழுவினர் அனுப்பப்பட்டுள்ளனர் என தேசிய பேரிடர் மேலாண்மை முகமை தலைவர் சுஹரியாண்டோ ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

இந்த நிலநடுக்கம் சுமத்ரா தீவின் வடக்கே 12 கி.மீ. ஆழத்தில், மேற்கு சுமத்ரா மாகாணத்தில் உள்ள புக்கிட்டிங்கி நகரில் இருந்து 70 கி.மீ. தொலைவில் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் (யு.எஸ்.ஜி.எஸ்.) தெரிவித்துள்ளது.

சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை, ஆனால் அண்டை மாகாணங்களான ரியாவ் மற்றும் வடக்கு சுமத்ராவிலும், சிங்கப்பூர் மற்றும் மலேசியாவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

# உக்ரைனுக்கு அப்பால் ரஷ்யா தாக்குதலை மேற்கொள்ளலாம் என்கிறது அமெரிக்கா



உக்ரைனுக்கு அப்பால் ரஷ்யாவின் தாக்குதலுக்கு சாத்தியம் இருப்பதாக, அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார். அத்துடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைன் அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சிப்பார் என்று தான் உறுதியாக நம்புகிறோம் எனவும் கூறியுள்ளனர்.

அமெரிக்க ஒளிபரப்பு நிறுவனமான ஏ.பி.சிக்கு அளித்த செவ்வியில், ‘வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கிலிருந்து நாட்டின் மீது பலமுனைத் தாக்குதலை நடத்துவதுடன், தலைநகர் கீவ் மற்றும் உக்ரைனில் உள்ள பிற முக்கிய நகரங்களைத் தாக்குவது ரஷ்ய திட்டத்தின் ஒரு பகுதி.

உக்ரைனுக்கு அப்பால் ஒரு ரஷ்ய தாக்குதல் சாத்தியம். ஆனால் நேட்டோ நட்பு நாடுகளைப் பாதுகாப்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கும். நேட்டோவின் ஒரு உறுப்பினர் மீதான தாக்குதல் நேட்டோவின் அனைத்து உறுப்பினர்கள் மீதான தாக்குதலாகும்.

நேட்டோ பிரதேசத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் நாங்கள் பாதுகாப்போம் என்பதில் ஜனாதிபதி மிகவும் தெளிவாக இருக்கிறார். உக்ரைனுக்கு அப்பால் செல்லும் ஜனாதிபதி புடினுக்கு எதிரான மிக சக்திவாய்ந்த தடுப்பு இதுவாகும். நிலைமை தீவிரமடையும் பட்சத்தில், புடினை நேரடியாக குறிவைக்க தற்போதுள்ள அமெரிக்க தடைகளை விரிவாக்குவதற்கான சாத்தியம் இன்னும் மேசையில் உள்ளது’ என கூறினார். பல தசாப்தங்களில் ஐரோப்பாவில் நடந்த முதல் பெரிய தரைப் போரைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ரஷ்யாவின் படையெடுப்பின் இரண்டாம் நாளில், உக்ரைனின் தலைநகரான கிய்வ் நோக்கி ரஷ்ய வீரர்கள் முன்னேறி வருகின்றனர். இந்தநிலையில், சுமார் 100,000 உக்ரேனியர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் என ஐ.நா. அகதிகள் நிறுவனம் கூறுகிறது.




# ரஷ்யா போரை நிறுத்தினால் உக்ரைன் பேச்சுக்குத் தயார்

ரஷ்யா உடனடியாக போர் நிறுத்தம் செய்தால் அமைதிப் பேச்சுக்களை நடத்த தயாராக இருப்பதாக, உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியின் செய்தித் தொடர்பாளர், செர்ஹி நிக்கி போரோவ் அறிவித்துள்ளார். முகப்புத்தகத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘நாங்கள் பேச்சு நடத்த மறுத்து விட்டோம் என்ற அறிக்கைகளை நான் மறுக்க வேண்டும். உக்ரைன் சண்டையின் முடிவு மற்றும் அமைதி பற்றி பேசத் தயாராக உள்ளது. இதுதான் எங்களின் மாறாத நிலை.

ரஷ்ய ஜனாதிபதியின் சலுகைக்கு நாங்கள் ஒப்புக்கொண்டோம். இந்த நேரத்தில், பேச்சு நடத்துவதற்கான இடம் மற்றும் நேரம் குறித்து இருதரப்பும் ஆலோசனை நடத்தி வருகின்றன.

பேச்சுகள் எவ்வளவு விரைவில் தொடங்குகிறதோ, அவ்வளவுக்கு அதிகமான வாய்ப்புகள் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்கும்’ என கூறினார்.

முன்னதாக வெள்ளிக்கிழமை, உக்ரைன் ஜனாதிபதியின் ஆலோசகர் மைக்கைலோ பொடோலியாக், நாடு அமைதியை விரும்புவதாகவும், நேட்டோ தொடர்பான நடுநிலை நிலை உட்பட ரஷ்யாவுடன் பேச்சுக்கு தயாராக இருப்பதாகவும் கூறினார்.

# புடினின் சொத்துக்களை முடக்க ஐரோப்பிய யூனியன் ஒப்புதல்


உக்ரைன் மீதான படையெடுப்பு தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் அவரது வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் மீது மேற்கத்திய நாடுகள் தனிப்பட்ட தடைகளை விதித்துள்ளன. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் உள்ள இவர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் முடக்கப்படும், அமெரிக்காவைப் பொறுத்தவரையில் பயணத் தடை விதிக்கப்படும். அண்டை நாடான உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்திய இரண்டாவது நாளில் இந்த அறிவிப்பு வெளிவந்தது.

தலைவர்களுக்கு எதிரான இத்தகைய தண்டனை நடவடிக்கைகள் அரிதானவை. உதாரணமாக, சிரியா மற்றும் பெலாரஸ் ஜனாதிபதிகள் மீது மட்டுமே ஐரோப்பிய ஒன்றியம் தடைகளை விதித்துள்ளது.

அமெரிக்கா, தனது பங்கிற்கு, சிரியாவின் பர் அல்-அசாத் தவிர, வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா மற்றும் கனடாவில் புடின் மற்றும் லாவ்ரோவ் ஆகியோரின் சொத்துக்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதும், பொருளாதாரத் தடைகள் என்ன நடைமுறை தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை.

வெளியுறவுக் கொள்கையில் மேற்குலகின் முழுமையான இயலாமையை அவர்கள் காட்டுவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.



# ரஷ்யாவிற்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம்; ஐ.நா.வாக்கெடுப்பை புறக்கணித்தது இந்தியா



உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்க ஐ.நா. சபையில் இன்று தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ரஷ்யா உடனடியாக நிபந்தனையின்றி உக்ரைன் எல்லையில் இருந்தும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் இருந்தும் அனைத்து இராணுவப் படைகளையும் முழுமையாக திரும்பப் பெறவேண்டும் என்றும் அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்கா, போலந்து, இத்தாலி, ஜேர்மனி, நியூசிலாந்து உள்ளிட்ட பல நாடுகளின் ஆதரவுடன் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில், 11 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. இந்தியா, சீனா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய 3 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

எனினும், ரஷ்யா தனக்கு உள்ள வீற்றோ அதிகாரத்தை பயன்படுத்தி இந்தத் தீர்மானத்தை முறியடித்தது. இதனால், உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும் ஐ.நா. சபையின் தீர்மானம் தோல்வியில் முடிந்தது.

வாக்கெடுப்புக்கு முன்னதாக இந்தத் தீர்மானம் மீது நடைபெற்ற விவாதத்தில் ஐ.நாவுக்கான இந்தியப் பிரதிநிதி திருமூர்த்தி உரையாற்றியபோது, உக்ரைனில் ஏற்பட்டுள்ள சமீபத்திய நிகழ்வுகளால் இந்தியா மிகவும் கவலையடைந்துள்ளது. வன்முறை மற்றும் விரோதப் போக்கை உடனடியாக நிறுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

அனைத்து உறுப்பு நாடுகளும் ஆக்கபூர்வமான வழியைக் கண்டுபிடிப்பதில் முன்னேற்றம் காண வேண்டும். கருத்து வேறுபாடுகள் மற்றும் சர்ச்சைகளை தீர்ப்பதற்கான ஒரே பதில் பேச்சு மட்டுமே, என்று தெரிவித்திருந்தார்.

## டெல்லியில் கொரோனாத் தொற்று கட்டுப்பாடுகள் முழுமையாக நீக்கம்

### ஏப்ரல் முதலாம் திகதி முதல் பாடசாலைகளில் நேரடி வகுப்புகள்



கொரோனாப் பரவல் காரணமாக டெல்லியில் பாடசாலைகள் மூடப்பட்டு இணைய வழியில் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது கொரோனாப் பாதிப்பு வெகுவாக குறைந்துள்ள நிலையில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு பாடசாலைகளில் முழுமையாக நேரடி வகுப்புகள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, டெல்லியில் ஏப்ரல் முதலாம் திகதி முதல் அனைத்துப் பாடசாலைகளும் இயங்கும் என்று முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார்.

வேலையிழப்பு காரணமாக மக்கள் கஷ்டங்களை எதிர்கொள்வதாலும், தற்போது கொரோனா பாதிப்பு குறைந்து நிலைமை சீரடைந்திருப்பதாலும் டெல்லி பேரிடர் மேலாண்மை ஆணையம் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் திரும்பப் பெறுகிறது. எனவே, பாடசாலைகள் அனைத்தும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் திறக்கப்பட்டு, முழுவதும் நேரடி வகுப்புகள் நடத்தப்படும்.

முகக்கவசம் அணியாதவர்களுக்கு அபராதம் 500 ரூபாவாகக் குறைக்கப்படுகிறது. கொரோனாத் தடுப்பு நெறிமுறைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும். அரசு உன்னிப்பாக கண்காணிக்கும், என்று முதல்வர் கெஜ்ரிவால் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்பே அனைத்து பாடசாலைகளும் திறக்கப்பட்டாலும் இணையவழி மற்றும் நேரடி வகுப்புகள் என இரண்டு முறைகளிலும் கல்விச் செயற்பாடுகள் நடைபெற்று வந்திருந்தன. 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு நேரடி வகுப்புகளும், ஏனைய வகுப்பு மாணவர்களுக்கு இணைய வழியிலும் வகுப்புகள் நடத்தப்பட்டன. இனி, பாலர் பாடசாலைகள் முதல் 12 ஆம் வகுப்பு வரை அனைத்துப் மாணவர்களுக்கும் நேரடி வகுப்புகள் மட்டுமே நடத்தப்படவிருக்கின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.




## உக்ரைனில் உள்ள இந்தியர்களை மீட்க இன்று இரு விமானங்கள் பயணம்

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளதால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. அங்குள்ள பல்வேறு நாட்டு மக்களும் தொடர்ந்து பீதியில் உறைந்துள்ளனர்.

இதற்கிடையே, உக்ரைனில் தவிக்கும் இந்திய மாணவர்களை பத்திரமாக மீட்டுக் கொண்டுவர வேண்டும் என பல்வேறு மாநில அரசுகளும் மாணவர்களின் பெற்றோரும் இந்திய மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

உக்ரைனில் வசிக்கும் இந்திய மாணவர்களை உடனடியாக அழைத்து வர இந்திய மத்திய அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. இதற்காக ருமேனியா தலைநகர் புகாரெஸ்ட், ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்ட் ஆகிய நகரங்களுக்கு இன்று இரண்டு விமானங்களை அனுப்புவதற்குத் திட்டமிடப்பட்டது.

உக்ரைனில் போர் உச்சமடைந்துள்ள நிலையில் இந்திய மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி இந்தியர்களை மீட்க விமானங்கள் இயக்கப்படுகின்றன என எயார் இந்தியா நிறுவனமும் அறிவித்துள்ளது.

உக்ரைனிலிருந்து வெளியேறி அயல் நாடான ருமேனியாவிற்கு வந்துள்ள இந்தியர்களை அழைத்துவர இன்று அதிகாலை 3.30 மணிக்கு மும்பை விமான நிலையத்தில் இருந்து விமானமொன்று புறப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

## காலாவதியாகும் கொரோனாத் தடுப்பூசிகளை மாற்றிக்கொள்ள சுகாதாரத்துறை அறிவிப்பு



தமிழகத்தில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணி இலக்கை எட்டி வருகிறது. இதுவரையில் 9 கோடியே 64 லட்சத்து 52 ஆயிரத்து 101 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் தடுப்பூசிகள் இலவசமாக செலுத்தப்பட்டாலும், தனியார் மருத்துவமனைகளில் கட்டணத்துடனேயே தடுப்பூசி வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் 200 க்கும் மேற்பட்ட தனியார் மருத்துவமனைகளில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படுகிறது. இதுவரையில் தமிழகத்தில் தடுப்பூசி வீணாவதைத் தடுத்து சேமித்ததன் மூலம் 11 லட்சம் பேருக்கு கூடுதலாக தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இந்த நிலையில் தனியார் மருத்துவமனைகளில் இருப்பு வைக்கப்பட்டிருந்த தடுப்பூசிகள் இந்த மாத இறுதியில் காலாவதியாகின்றன என அரச சுகாதாரத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல லட்சம் மதிப்புள்ள கொரோனாத் தடுப்பூசிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்தாததால் அவை வீணாகின்றன. இதைக் கருத்தில் கொண்டு காலாவதி ஆகக்கூடிய மற்றும் காலாவதியான தடுப்பூசிகளை அரசு பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக மாற்றுத் தடுப்பூசிகளைக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது..

தமிழகம் முழுவதும் காலாவதியான தடுப்பூசிகள் தனியார் மருத்துவமனைகளில் இருந்தால் அவற்றைக் கையளித்துவிட்டு புதிய தடுப்பூசிகள் மாற்றிக் கொடுக்கப்படுமென தமிழக அரசு அறிவித்துள்ளது. இது நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கையளிக்கப்படுபவற்றுக்குப் பதிலாக மேலும் 6 மாத கால அவகாசம் உள்ள தடுப்பூசிகள் தமிழக சுகாதாரத்துறையினால் வழங்கப்படுகின்றன.

இது குறித்து தமிழக பொதுச் சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம் தகவல் வழங்கியுள்ளார். தமிழகத்தில் தனியார் மருத்துவமனைகளில் காலாவதியான தடுப்பூசிகள் அனைத்து மாவட்டங்களிலும் சேகரிக்கப்படுகின்றன. அதற்கு மாற்றாக அரசின் சார்பில் மேலும் 6 மாதத்திற்கு பயன்படுத்தக்கூடிய தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. தனியார் மருத்துவமனைகள் அந்தந்த மாவட்ட சுகாதாரத் துணை இயக்குநர்களை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம், என்று அவர் தெரிவித்துள்ளார்.





# சம்மாந்துறையை ஒட்டிய பிரதேசத்தில் திடீரெனப் புகுந்த யானைகள் கூட்டம்

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை திடீரென சம்மாந்துறை ஊடாக மஜீட்புரம் பகுதிகளை ஊடறுத்து ஊருக்குள் பிரவேசிக்க முயன்ற சுமார் 100 க்கும் அதிகளவான யானைகளைக் கட்டுப்படுத்தி அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்குத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாலை முதல் இரவு வரை இந்த யானைகள் நகர்ந்து செல்லாமல் ஒரே இடத்தில் கூடி நிற்கின்றமை மற்றும் அவை கலவரப்பட்டமை தொடர்பில் வனவிலங்கு அதிகாரிகளுக்குப் பொதுமக்களால் தகவல் தெரிவிக்கப் பட்டது.

இதனையடுத்து யானைகளை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகளைத் தாங்கள் மேற்கொள்வர் எனத் தெரிவித்த வனவிலங்கு அதிகாரிகள்,யானைக்கூட்டத்தின் நகர்வுகளை அவதானித்து நடவடிக்கை எடுத்தனர். சம்மாந்துறை வளத்தாபிட்டி பகுதிகளில் பொதுமக்கள் குவிந்து நின்று யானைக் கூட்டத்தை அவதானித்தமையையும் காணமுடிந்தது. யானைக் கூட்டத்தை பார்வையிட வரும் மக்களால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டமையையும் அவதானிக்க முடிந்தது.




# வாகரையில் எரிந்த நிலையில் சடலமாக வயோதிப மாது மீட்பு

மட்டக்களப்பு வாகரையில் வீடு ஒன்றில் இருந்து 64 வயதுடைய பெண் ஒருவர் தீயில் எரிந்து உயிரிழந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

நாகபுரம் பால்சேனையைச் சேர்ந்த 64 வயதுடைய பூமணஜ தேவி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு குப்பி விளக்கு ஒன்றை எரியவைத்து-விட்டு அதற்கு அருகில் அவர் ஆழ்ந்த நித்திரையில் இருந்திருக்கிறார் எனக் கூறப்படுகிறது. அப்போது குப்பிவிளக்கு அவர் மீது வீழ்ந்ததன் காரணமாக அவர் தீபற்றி எரிந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட இருந்தது. அதற்கான நீதிமன்ற அனுமதியை பெறும் நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்மாந்துறை வலயம் மாணவர்களுக்கெனத் தயாரித்த சுயகற்றலுக்கான மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன

(காரைதீவு நிருபர் சகா)



கிழக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி. திஸநாயக மற்றும் கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் ஆகியோர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சம்மாந்துறைக்கு விஜயம் செய்தனர்.



சம்மாந்துறை வலயக் கல்விப்பணிமனை நடத்திய நூல் வெளியீட்டுவிழாவில் அவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்நூல் வெளியீட்டுவிழா, சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். சஹறுதுல் நஜீம் தலைமையில் சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) நடைபெற்றது.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள பொதுப் பரீட்சைகளில் மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிக்கும் செயற்றிட்டத்தின்கீழ், இழந்த கல்வியை மீட்கும் கொவிட்19 விடுமுறைக்கான செயற்றிட்டமாக சம்மாந்துறை கல்வி வலயம் தயாரித்த மாணவர்களுக்கான மூன்று சுயகற்றல் நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

தரம் 11இற்கான விஞ்ஞானம் மற்றும் கணித நூல்கள் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் தரம்4 மாணவருக்கான கணிதம், தமிழ்மொழி, சுற்றாடல்சார் செயற்பாடுகளடங்கிய நூல் என்பன வெளியிட்டு வைக்கப் பட்டன.கூடவே இவ்வாண்டுக்கான வலய வருடாந்த அமுலாக்கத்திட்ட கைநூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

முன்னதாக, அதிதிகள் மாலை சூட்டப்பட்டு பாண்டிய வாத்தியம் சகிதம் வரவேற்கப்பட்டு, தேசிய மாகாண மற்றும் வலயக்கொடி ஏற்றப்பட்டு, தேசியகீதம் இசைக்கப்பட்டு, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ,பௌத்தமத இறைவணக்கத்துடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாயின.அரங்க நிகழ்வுகளை உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தித் தொகுத்தளித்தார். தொடர்ச்சியாக, நூல் அறிமுகவுரைகளை ஆசிரிய ஆலோசகர்களான எம்.எம்.எம்.ஜெளபர், ரி.எல். றைஸ்டீன், ஏ.ஜி.எம்.கிஷோர் ஆகியோர் நிகழ்த்தினர். பின்னர் மூன்று நூல்களையும் பணிப்பாளர் நஜீம் அதிதிகளிடம் வழங்கி வைத்து வெளியிட்டுவைக்கப்பட்டன.பின்னர் அவை அதிபர்களிடம் வழங்கப்பட்டன. மாணவர்களின் மூவின கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. கல்வி அபிவிருத்திக் கான பிரதிக் கல்விப்பணிப்பாளர் எ.எல்.எ.மஜீட் நன்றியுரையாற்றினார்.



# சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் சிறு சத்திரசிகிச்சைக் கூடம் திறந்து வைப்பு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் சிறு சத்திரசிகிச்சைக் கூடம் மீண்டும் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் கலந்து கொண்டு கூடத்தைத் திறந்து வைத்தார்.

கௌரவ அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சி. எம். மாஹீர், விசேட அதிதியாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி யூ.எல்.எம். நியாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுச் செயலாளர், வைத்தியர்கள், தாதிய பரிபாலகர், நிர்வாக உத்தியோகத்தர், தாதியர்கள் மற்றும் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். திறந்து வைத்த வெள்ளிக்கிழமை அன்று 6 சிறு சத்திர சிகிச்சைகள் அங்குவெற்றிகரமாகஇடம்பெற்றமைகுறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





# மெக்ஸிகன் ஓபன் டென்னிஸ் தொடர் இறுதிப்போட்டியில் ரபேல் நடால்!

உலகின் பிரபல டென்னிஸ் வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால், மெக்ஸிகன் ஓபன் டென்னிஸ் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளார்.

இன்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ரபேல் நடாலும், ரஷ்யாவின் டனில் மெட்வேடவும் ஒருவரையொருவர் எதிர்கொண்டிருந்தனர். எதிர் பார்ப்போடு நடைபெற்ற இந்தப்போட்டியில், ரபேல் நடால், 6-3, 6-3 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

நாளை நடைபெறும் இறுதிப் போட்டியில் பிரித்தானியாவின் கமரூன் நோரியை ரபேல் நடால் எதிர்கொள்ளவுள்ளார்.

# தென்னாபிரிக்க அணியுடனான இரண்டாவது டெஸ்ட் இரண்டாம் நாளில் நியூசிலாந்து அணி தடுமாற்றம்



தென்னாபிரிக்கா - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது. இன்றைய நாள் ஆட்ட நேர முடிவில் தனது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கொலின் டி கிராண்ட்ஹோம் 54 ஓட்டங்களுடனும் டரில் மிட்ச்செல் 29 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

கிறிஸ்ட்சேர்ச் மைதானத்தில் நேற்று ஆரம்பமான இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்து, முதல் இன் சிங்ஸிற்காக 364 ஓட்டங்களைப் பெற் றுக்கொண்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான டீன் எல்கர் மற்றும் சரல் ஏர்வி இருவரும் முறையே 41, 108 ஓட்டங்களை எடுத்தனர். எய்டன் மார்க்ரம் 42 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்திருந்தார்.

நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில், நீல் வக்னர் 4 விக்கெட்டுக்களையும் மட் ஹென்றி 3 விக்கெட்டுக்களையும் கெய்ல் ஜேமிசன் 2 விக்கெட்டுக்களையும் டிம் சவுத்தி ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தி னர். முதல் இன்னிங்ஸில் 207 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தை நியூசிலாந்து அணி நாளை தொடரவுள்ளது.

# ஆப்கானுடனான ஒருநாள் தொடர் கைப்பற்றியது பங்காதேஷ்

ஆப்கானிஸ்தான் அணியுடனான ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டியில் பங்களாதேஷ் அணி 88 ஓட்டங்களால் வெற்றிபெற் றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை, ஒரு போட்டி மீதமுள்ள நிலையிலேயே 2-0 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி கைப்பற்றியுள்ளது.

நேற்று நடைபெற்ற இந்தப்போட்டி யில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்து, 50 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 306 ஓட் டங்களை குவித்தது. லிட்டொன் தாஸ் 136 ஓட்டங்களையும் முஷ்பிகுர் ரஹீம் 86 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

ஆப்கானிஸ்தான் அணியின் பரீட் அஹமட் 2 விக்கெட்டுக்களையும் பசல் ஹக் பரூக்கி மற்றும் ரஷிட் கான் ஆகி யோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். அடுத்து 307 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய ஆப் கானிஸ்தான் அணி, 45.1 ஓவர்களில் 218 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்க ளையும் இழந்து 88 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. நஜிபுல்லா சத்ரான் 54 ஓட்டங்களையும் ரஹமட்ஷா 52 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். பங்க ளாதேஷ் அணியின் தஸ்கின் அஹமட் மற்றும் சகிப் அல் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக பங்களாதேஷ் அணியின் லிட்டொன் தாஸ் தெரிவுசெய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான மூன்றா வதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டி, நாளை மறுதினம் நடைபெற வுள்ளது.




# ஐ.பி.எல். 2022 - தொடரின் போட்டிகள் மார்ச் 26 ஆரம்பமாகுமென அறிவிப்பு




10 அணிகள் கொண்ட இந்தியன் பிறிமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரின் இந்த வருடத்துக்கான போட்டிகள் மும்பையில் நடைபெற உள்ளன. மார்ச் 26 ஆம் திகதி ஆரம்பமாகி மே 29 வரை இந்தத் தொடர் நடைபெற வுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள் ளது.

ஐ.பி.எல். ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்திற்குப் பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்த ஐ.பி.எல். தலைவர் பிரிஜேஷ் பட்டேல், இந்த ஆண்டின் ஐ.பி.எல். போட்டி கள் நடைபெறும் காலப்பகுதி தொடர்பான விவரங்களை உத்தியோகபூர்வமாக அறி வித்தார்.

இந்த ஆண்டு லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் ஆகிய இரண்டு புதிய அணிகள் சேர்க்கப்பட்ட நிலையில், மும்பையின் வான்கடே, பிரபோர்ன், நவி மும்பையின் டி.வை. பட்டில் மைதானம் மற்றும் புனேயில் உள்ள கஹுஞ்சே மைதானம் ஆகியவற்றில் இந்த வருடத் துக்கான 74 போட்டிகளும் நடைபெற உள்ளன என அவர் தெரிவித்தார்.

மகாராஷ்டிரா மாநில அரசால் நிர்ணயிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பு வழிகாட்டுதல்களின்படி ரசிகர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும், முதல் கட்டப் போட்டிகளுக்கு மைதானக் கொள்ளளவின் 40 சதவீத ரசிகர்கள் அனுமதிக்கப்படவிருக்கும் நிலையில், கொரோனா பரவல் கட்டுக்குள் இருக்கும் பட்சத்தில், முழு அளவில் ரசிகர்கள் அனுமதிக்கப்படலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிளே ஒவ் சுற்று ஆட்டங்கள் நடைபெறும் மைதானங்கள் குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் இறுதிப் போட்டியை அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடத்த வாய்ப்பு இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

# நாடாளுமன்றத்தில் ரோச் லைட் போராட்டம்; பொலிஸ் மா அதிபரிடம் முறையிடப்படுமாம்!

## சபாநாயகர் மன்றில் தெரிவிப்பு



நாடாளுமன்றில் எதிர்க்கட்சியினர் ரோச்களுடன் போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (வெள்ளிக்கிழமை) சபையில் தெரிவித்தார். ஒரு பிரச்சினைக்கு எதிர்ப்பு தெரிவிப்பது பிரச்சினையல்ல என்றும், அரசு அதிகாரிகள் தங்கள் பணிகளைச் செய்யவிடாமல் தடுக்கப்பட்டதே பிரச்சினை என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மின்வெட்டால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக எடுத்துக்காட்டும் விதமாக வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் ரோர்ச் லைட் ஏற்றியதன் காரணமாக ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து, நாடாளுமன்ற விவாதம் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினரால் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்ட பொருளை பரிசோதிக்குமாறு பொலிஸார் கோரியபோது மோதல் ஏற்பட்டதாக சபையின் தலைவர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இதனையடுத்து, குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, தான் கழிவறையை பயன்படுத்தும்போது மின்வெட்டு ஏற்படக்கூடும் எனவும், அதனால்தான் 3 ரோர்ச்களை பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தேன் எனவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் குணவர்தன, நாடாளுமன்றத்துக்குள் இவ்வாறான பொருள்கள் அனுமதிக்கப்படாததால், விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், மின்வெட்டு ஏற்பட்டாலும், இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது மற்றும் நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு எதிரானது என்றும் தெரிவித்தார்.

மேலும் இந்த பொருள் ஒரு பாதுகாப்பு ஆபத்து என்பதை நிரூபிக்க முடியும் என்றும் தடை செய்யப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார். இதனையடுத்தே இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

# லீசிங் பணம் கட்டுவதற்காகவே பெண்ணைக் கொலைசெய்தேன்!

## யாழ். கொலை சந்தேகநபர் வாக்குமூலம்

'மோட்டார் சைக்கிள் லீசிங் பணம் கட்டுவதற்கு பணம் தேவைப்பட்டதால் வயோதிபப் பெண்ணைக் கொலை செய்துவிட்டு அவர் அணிந்திருந்த சங்கிலியை அபகரித்துச் சென்றேன்.' எனயாழ்ப்பாணம் மாநகரில் தனிமையிலிருந்த வயோதிபப் பெண் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட இளம் குடும்பத்தலைவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியூவில் உள்ள வீடொன்றில் தனிமையில் வசித்த வயோதிபப் பெண் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

மரியநாயகம் காணிக்கையம்மா ஜெயசீலி (வயது - 72) என்ற வயோதிபப் பெண்ணே கொலை செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் டில்றொக் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவ தினத்தன்று அண்மையிலுள்ள சி.சி.ரி.வி. கமரா பதிவில் கொலையாளி சைக்கிளில் பயணித்துள்ளார். அதனடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டவர் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இராசாவின் தோட்டம் பகுதியில் கொலைச் சந்தேகநபர் சைக்கிளில் பயணித்த போது பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த 28 வயதுடைய இளம் குடும்பத்தலைவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் வழங்கிய வாக்குமூலத்தில் -

வயோதிபப் பெண்ணின் வீட்டில் முதல் நாள் பூக்கன்றுகளை வெட்டி வேலை செய்தேன். மறுநாள் மிகுதி வேலையை செய்யுமாறு கேட்டிருந்தார்.

மறுநாள் சென்றபோது பட்டமரத்தை வெட்டுமாறு அயலில் உள்ள வீட்டில் கோடாரி, மண்வெட்டியை வயோதிபப் பெண் வாங்கித்தந்தார்.

எனது மனைவிக்கு மோட்டார்சைக்கிள் லீசிங்கில் வாங்கிக் கொடுத்தேன். அதற்கான பணத்தை உறவினரிடம் வாங்கிக் கட்டியிருந்தேன். அவர் தன்னிடம் வாங்கிய 20 ஆயிரம் ரூபா பணத்தை மீளத் தருமாறு அடிக்கடி கேட்டார்.

அதனால் கோடரியை எடுத்துக்கொண்டு தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த வயோதிப் பெண்ணின் பின்னால் சென்று தலையில் தாக்கினேன். அவர் சுயநினைவற்றிருந்தார். அவரது சங்கிலியை அபகரித்துக் கொண்டு சென்றுவிட்டேன். - என்று தெரிவித்தார்.

அத்துடன் தனது வீட்டுக்கு பொலிஸாரை அழைத்துச் சென்ற சந்தேகநபர் பை ஒன்றிலிருந்த தங்கச் சங்கிலியை எடுத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி பொலிஸ் தடுப்பில் வைத்திருக்க பொலிஸார் விண்ணப்பம் செய்யவுள்ளனர்.



# வடமாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் வவுனியாவில் நடந்தது நடமாடும் சேவை

வடமாகாண ஆளுநரின் திட்டமிடலுக்கு அமைய வடமாகாண நடமாடும் சேவை வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களுக்காக இடம்பெற்றது.

வவுனியா காமினி மாகாவித்தியாலயத்தில் இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

இதில் வடமாகாணத்திற்குட்பட்ட காணித் திணைக்களம், போக்குவரத்து திணைக்களம், விவசாய அமைச்சு, கல்வி அமைச்சு, ஆட்பதிவு திணைக்களம், விவசாய அமைச்சு, சுகாதார திணைக்களம், உள்ளூராட்சி அமைச்சு, நீர்ப்பாசனத் திணைக்களம், பிறப்பு - இறப்பு - விவாகப் பதிவு திணைக்களம், கால்நடை உற்பத்தி, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உள்ளிட்டபலதிணைக்களங்களும், அமைச்சுக்களும் இந்த நடமாடும் சேவையில் பங்கேற்றன.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் வழிப்படுத்தலில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்கள் பலரும் கலந்து கொண்டு நீண்டகாலமாகத் தீர்க்கப்படாது இருந்த பல பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொண்டனர்.

இதில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், அரச அதிகாரிகள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# ஆர்ப்பாட்டத்துக்கு தாதியர் சங்கத்துக்கு மார்ச் 11 வரை நீதிமன்றம் தடை உத்தரவு!

அரச தாதியர் சங்கத்திற்கு எதிர்வரும் மார்ச் 11ஆம் திகதி வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு தொடர்ந்தும் தடைவிதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரச தாதியர் சங்கம் மேற்கொண்டிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை உடனடியாக இடைநிறுத்த உத்தரவு பிறப்பிக்கக் கோரி அரச தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவர் சமன் ரத்னபிரிய ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இதனையடுத்து, அரச தாதியர் சங்கம் மேற்கொண்டிருந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதை தடுக்கும் வகையில் கடந்த 10 ஆம் திகதி நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.02.2022இல் வெளியிடப்பெற்றது.